எந்த வெளிப்படைத் தன்மையும் இல்லை!

த.வெ.க. அரசின் மின்சாரக் கொள்முதலில் ஊழல்!

முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குற்றச்சாட்டு!

சென்னை, அக். 15 -

த.வெ.க. அரசின் மின்சார கொள்முதலில் மிகப்பெரிய முறைகேடும், ஊழலும் அரங்கேறியுள்ளதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு : -

பொதுவாக தமிழ்நாட்டில் மின் வெட்டை பற்றி பேசாத நாட்கள், செய்திகள் வராத நாட்கள் ஒரு நாட்கள் கூட இல்லை. குறிப்பாக அரசு நிகழ்ச்சிகள், அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், சட்ட கல்லூரி பட்டமளிப்பு விழாவில் நீதி பதிகள், மின்துறை அமைச்சர் பங் கேற்ற நிகழ்ச்சியில் பவர் கட் ஆனது. அதற்கு மின்வாரியம் ஒரு விளக்கம் கொடுத்தது. கொஞ்சம் நேரத்தில் அமைச்சர் விளக்கம் கொடுத்தார்.

தலைமைச் செயலகத்தில் மின்வெட்டு!

தொடர்ந்து மின்வாரியத்தின் விளக் கம் நீக்கப்பட்டது. உச்சப்பட்சமாக தலைமை செயலகத்தில் மின்வெட்டு நடக்கும் அளவுக்கு இன்றைய ரீல்ஸ் ஆட்சி ஒரு மோசமான நிலையில் உள் ளது. வெறும் ரீல்ஸ் மட்டும் முன் வைத்து, மக்களிடம் எடுத்து சென்று, ஆட்சி நடத்தக்கூடிய இன்றைய டம்மி முதல்வர் ஒவ்வொரு துறைகளிலும் ஏற் படக் கூடிய, மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள் பற்றி கவலைப்படாமல் ஒரு அரசு நடந்து கொண்டிருக்கிறது.

அது த.வெ.க. அரசு, முதல்வர் தான் அப்படியிருக்கிறார் என்றால், அந்தந்த துறையை கவனிக்கும் அமைச்சர், அவர் துறையை தவிர எல்லா துறைக் கும் விளக்கம் சொல்வார் பதில் சொல் வார். அவருடைய மின்சார துறையில் கேள்வி கேட்டால், கேட்ட கேள்விக்கு பதில் இல்லாமல் வேறு பதிலை முன் வைப்பார். ஒரு அமைச்சர் மக்கள் பாதிக் கப்படும் போது, எதிர்க்கட்சிகள். பொது மக்கள், நடுநிலையாளர்கள் கேள்வி கேட்கும் போது உரிய பதிலை சொல்ல வேண்டியது கடமை. அதற்கு தீர்வு காண வேண்டியது துறை யின் கடமை. அமைச்சரின் கடமை, இந்த ஆட்சி பொறுப்பேற்று 5 மாதம் ஆகியும் மின் வெட்டு பற்றி எந்த நடவடிக் கையும் எடுக்காத அரசாக உள்ளது.

தி.மு.க. ஆட்சியில் சீரான மின்சாரம்!

பீஸ் கேரியர் காணாமல் போனது என்று சொன்னார்கள். துறைகளின் கருப்பு ஆடுகள் என்று சொன்னாங்க. இப்படி ஒவ்வொரு காரணத்தை அடுக்கி வந்த அமைச்சர், கடைசியில் பஞ்சாப் பில் 15 மணி நேரம் மின்வெட்டு என்று பதில் சொல்லும் அளவுக்கு ஒரு மோச மான நிலையில் இன்றைய அரசு செயல்பட்டு வருகிறது. தி.மு.க. ஆட்சி



யில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொற் கால ஆட்சியில் ஆண்டு தோறும் மின் தேவை அதிகரித்து கொண்டே வந்தது. 4341 மெகாவாட் அளவுக்கு 5 ஆண்டு களில் கூடுதல் மின்தேவை ஏற்பட்டது. ஆண்டுக்கு ஆயிரக்கணக்கில் மெகா வாட் மின்தேவை தேவைப்பட்டாலும் சீரான மின்சாரம் வினியோகம் செய் தது தி.மு.க.

இதை வழி நடத்தியவர் மு.க.ஸ்டாலின். இன்றைய அரசு 5 மாத காலத்தில் அதற்காக ஏற்பாட்டை செய்யவில்லை. நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது 2021ல் இன்றைய மின் அமைச்சர் ஒரு பதிலை போட்டு இருந்தார். ரூ.20க்கு மின்சாரத்தை கொள்முதல் செய்றாங்க ரிசைன் இபி மினிஸ்டர் என்று போட்டு இருந்தார். இன்றைக்கு ரூ.35க்கு கொள்முதல் செய்கிறது. நாங்கள் 20 ரூபாய்க்கு அதி கப்பட்சம் கொள்முதல் செய்யும் போது, அப்ப என்ன சூழல் ஏற்பட்டது என்றால், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் அதிகப்பட்ச மின்சார தேவை ஏற்படும்.

வெளிச் சந்தையில் கொள்முதல்!

இதன் முன் ஏற்பாடாக நவம்பர், டிசம் பர் மாதத்தில் டெண்டர் போடுவதற்கான முன் ஏற்பாடுகளை எடுப்போம். கூடுத லாக எவ்வளவு தேவைப்படும் என்று கணக்கெடுத்து பொங்கலுக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்படும். எந்த சூழ்நிலையில் எக் சேஞ்சில் போய் மின் சாரத்தை கொள்முதல் செய்யும் நிலை ஏற்படும் என்றால், நம்முடைய ஓன் பிளாண்ட், ஏதாவது ஒரு பிளாண்ட் ரிப் பேர் ஆகிவிட்டது. உற்பத்தி செய்ய முடி யவில்லை என்றால். அவசர தேவைக்கு கொள்முதல் செய்வதற்கான வசதி வாய்ப்பாக வைத்து இருந்தோம். இன் றைய அரசு முழுக்க, முழுக்க வெளிசந் தையில் கொள்முதல் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முதல்வர் விளக்கம் அளிக்க வேண்டும்!

அ.தி.மு.க. ஆட்சியில் 22 ஆயிரம் மில்லியன் யூனிட் ஒரு வருசம் டான் ஜெட் கோவின் சொந்த உற்பத்தியாக இருந்தது. தி.மு.க. ஆட்சியில் 29 ஆயி ரம் மில்லியன் யூனிட்டாக நாங்கள் உயர்த்தினோம். அதற்கு காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவ டிக்கை, இன்றைய த.வெ.க. அரசில் 34, 35 சதவீதமாக உள்ளது. அதுவும் முழுமையாக குறைக்கப்பட்டுள்ளது. அதற்கு . காரணம் அந்த துறையை சார்ந்திருக்கும் அமைச்சர். வெளிச்சந் தையில் கொள்முதல் செய்வதற்கான முதல் நடவடிக்கை எடுத்து இருக்கிறார் கள். குறிப்பாக ஆந்திராவில் இருந்து வருகிறது என்ற தகவல் இருக்கிறது. அதற்குள் நான் செல்லவில்லை.

பொதுவாக நம்முடைய உற்பத் தியை குறைத்து வெளிச்சந்தையில் யூனிட் ரூ.35க்கு கொள்முதல் செய்வது என்பது மின் துறையின் ஒட்டுமொத்த நிதிநிலையை சீரழித்து. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை தடை செய்து, இந்த த.வெ.க. அரசு அதிக விலை கொடுத்து, கொள்முதல் செய்ய வேண் டியுள்ளது. விஜய் அன்றைக்கு என்ன பேசினாரோ? அது அவருக்கு பொருந் தும். எங்களை பொறுத்தவரைக்கும் 32 ஆயிரம் மெகாவாட்டாக நிறுவு திறனாக இருந்ததது. 45 ஆயிரம் மெகாவாட்டாக எங்களுடைய முதல்வர் உயர்த்தி கொடுத்தார். சீரான மின்வினியோகம் செய்த அரசு தி.மு.க. அரசு பொதுவாக 8200 மில்லியன் யூனிட் உபரியாக இருந்ததை விற்பனை செய்தோம். பஞ் சாப் போன்ற மாநிலங்களுக்கு கொடுத்து விட்டு, தேவைப்படும் காலங்களில் வாங்கினோம். அடிப்படை கட்டமைப்பு உயர்த்தப்பட்டது. அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவது ஏன்? என்பதற்கு முதல்வர் விளக்கம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதலமைச்சர் ஆட்சியில்

தமிழ்நாட்டில் உச்சத்தில் விலைவாசி!

நாட்டிலேயே முதலிடம் பெற்ற அவலம்! ஒன்றிய புள்ளியியல் அமைச்சகம் தகவல்!

சென்னை, அக். 15 -

தமிழ்நாட்டில் சில்லறை பண வீக்கம் செப்டம்பர் மாதத்தில் 6.81% ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் நாட்டிலேயே அதிக பணவீக்கம் கொண்ட மாநிலங்களில் புதுச்சேரிக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

உணவு பொருட்களின் விலை உயர்வு காரணமாக இந்தியாவின் ஒட்டுமொத்த சில்லறை பணவீக்கமும் ரிசர்வ் வங்கியின் 6% உச்ச வரம்பை நெருங்கியுள்ளது.

ஒன்றிய புள்ளியியல் அமைச்சகம் நேற்று முன்தினம் இந்தியாவில் பதிவான புள்ளி விவரங்கள் குறித்த ரிப்போர்ட்டை வெளியிட்டு இருந்தது. நாட்டில் எவ்வளவு பணவீக்கம் நிலவுகிறது என்பதை பொறுத்தே வட்டி விகிதம் உட்பட அனைத்தும் முடிவு செய்யப்படும் என்பதால் பொதுமக்கள் இதை உற்று கவனித்தே வருகிறார்கள்.

சில்லறை பணவீக்கம்

இந்த சூழலில் தான் மத்திய புள்ளியியல் அமைச்சகம் பண வீக்கம் தொடர்பான தகவல் களை பகிர்ந்துள்ளது. இந்தியா வின் சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 4.83%ஆக இருந்த நிலையில், செப்டம்ப ரில் 5.54%ஆக அதிகரித்துள் ளது. இதே காலகட்டத்தில் உணவு பணவீக்கம் 5.97% லிருந்து 7.74% ஆக உயர்ந் துள்ளது.

தமிழ்நாடு மோசம்

மாநிலங்கள் மற்றும் யூனி யன் பிரதேசங்களை பொறுத்த வரை புதுச்சேரி யில் தான் பண வீக்கம் உச்சத்தில் இருக்கிறது. அங்கு பணவீக்கம் அதிகபட்ச மாக 6.86% பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில் 6.81% பணவீக்கம் பதி வாகியுள்ளது. ஒடிசாவில் 6.70%, மத்திய பிரதேசத்தில் 6.68%, தெலுங்கானாவில் 6.64% பணவீக்கம் பதிவாகியுள்ளது.



உணவு பொருட்கள்

உணவு பொருட்களில் வெங் காயத்தின் விலை மிக கடுமை யாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பருடன் ஒப்பி டும்போது, இந்த ஆண்டு செப் டம்பரில் வெங்காயத்தின் பண வீக்கம் 108.09% அதிகரித்துள் ளது. ஆகஸ்ட் மாதத்தில் இது 48.78% ஆக இருந்தது. இதே போல் இஞ்சியின் விலை கடந் தாண்டு உடன் ஒப்பிடுகையில் இந்தாண்டு 62.85% உயர்ந் துள்ளது. பூண்டின் பணவீக்கம் 54.62% ஆகவும், எலுமிச்சை யின் பணவீக்கம் 36.41% ஆக வும் அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் எலுமிச்சையின் பணவீக்கம் 15.15% ஆக இருந் தது. வெள்ளி நகைகளின் பண வீக்கம் 87.80% ஆகப் பதிவாகி யுள்ளது.

இந்தாண்டு நகர்ப்புறங் களை காட்டிலும் கிராமப்புறங்க ளில் பணவீக்கம் அதிகமாக உள்ளது. கிராமப்புறங்களில் சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 5.24% ஆக இருந்த நிலையில், செப்டம்பரில் 6.08% ஆக உயர்ந்துள்ளது. நகர்ப்புறங்களில் இது 4.31% லிருந்து 4.88%ஆக அதிகரித் துள்ளது. கிராமப்புற உணவு பணவீக்கம் 8.06% ஆகவும், நகர்ப்புற உணவுப் பணவீக்கம் 7.18% ஆகவும் உள்ளது.

விலை குறைந்த பொருள்கள்

அனைத்து பொருட்களின் விலையும் ஒரே மாதிரியாக உயரவில்லை. கடந்த ஆண்டு டன் ஒப்பிடும்போது உருளைக் கிழங்கு விலை 11.50% குறைந் துள்ளது. தக்காளி விலை 8.62% சரிந்துள்ளது. மோட் டார் கார்கள் மற்றும் ஜீப்புகளின் விலை 4.51% குறைந்துள்ள நிலையில், வெண்டைக்காய் விலை 4.48%, தேங்காய் விலை 3.99% சரிந்துள்ளது.

உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் 9.36% பணவீக் கம் பதிவாகியுள்ளது. தனிநபர் பராமரிப்பு, சமூக பாதுகாப்பு மற் றும் இதர பொருட்கள், சேவை கள் பிரிவில் விலை உயர்வு 13.75% ஆக உள்ளது. சுகாதா ரப் பிரிவில் பணவீக்கம் 1.40% ஆகவும், வீடு, தண்ணீர், மின் சாரம், எரிவாயு உள்ளிட்ட பிரிவு களில் 2.74% ஆகவும் உள் ளது. 2024 அடிப்படை ஆண்டை கொண்ட கணக்கிடப் பட்ட பணவீக்கத்தில் இந்த செப் டம்பர் மாத பணவீக்கமே அதிக பட்சமாகும்.

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி கடந்த வாரம் தான் ரெப்போ வட்டி விகிதத்தை 0.25% உயர்த்தி 5.50%ஆக நிர்ணயம் செய்திருந்தது. கடந்த 4 ஆண்டுகளில் வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இதுவே முதல்முறை. அடுத்து டிசம்பர் மாதம் கூட்டம் நடைபெற உள்ள நிலையில் இந்த பண வீக்க டேட்டா எல்லாம் முக்கியத் துவம் பெறுகிறது.

தமிழ்நாடு மோசம்!

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பொறுத்தவரை புதுச்சேரியில் தான் பணவீக்கம் உச்சத்தில் இருக்கிறது. அங்கு பணவீக்கம் அதிகபட்சமாக 6.86%பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 6.81% பணவீக்கம் பதிவாகியுள்ளது. ஒடிசாவில் 6.70%, மத்திய பிரதேசத்தில் 6.68%, தெலுங்கானாவில் 6.64% பணவீக்கம் பதிவாகியுள்ளது.

